# தினசரி வருமானத்திற்கு ‘நாட்டு’ எலுமிச்சை… புளியங்குடி விவசாயிகளின் பலே பணப்பயிர்!

திருநெல்வேலிக்கு அல்வா என்றால், புளியங்குடிக்கு ‘எலுமிச்சை’தான் அடையாளம். அந்தளவுக்கு இந்த ஊரின் சுற்று வட்டாரப் பகுதிகளில் எலுமிச்சை சாகுபடி அதிகளவில் நடக்கிறது. இப்பகுதிகளில் உள்ள மண் மற்றும் தட்பவெப்ப சூழ்நிலை எலுமிச்சை சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. கரும்பு, நெல் ஆகியவையும் இப்பகுதிகளில் விளைந்தாலும், தினசரி வருமானம் தரும் எலுமிச்சையையே இங்கு பணப்பயிராக கருதுகிறார்கள். எலுமிச்சைக் கன்றுகளை குழந்தைகளைப் போல் பராமரிக்கும் இப்பகுதி விவசாயிகள், எலுமிச்சைத் தோப்புக்குள் செருப்புகூட அணிந்து செல்வதில்லை. அமாவாசை, பௌர்ணமி போன்ற முக்கிய விரத நாட்களில் எலுமிச்சைத் தோப்புக்கு சாம்பிராணி காட்டும் அளவுக்கு, தெய்வமாகவும் போற்றுகிறார்கள்.

**லெமன் சிட்டி !**

இப்பகுதியின் ‘முன்னோடி இயற்கை விவசாயி’ அந்தோணி சாமியிடம் எலுமிச்சை பற்றிப் பேசியபோது, “இந்த ஏரியாவுக்கு புளியங்குடிதான் முக்கியமான எலுமிச்சைச் சந்தை. கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்துகூட இங்கு எலுமிச்சை வரும். ராஜபாளையம், சுரண்டை, கடையம், அம்பாசமுத்திரம், தென்காசி, செங்கோட்டை, பண்பொழி, கடைய நல்லூர், வாசுதேவநல்லூர் மற்றும் கோவில்பட்டி என்று கிட்டத்தட்ட இருபத்தைந்தாயிரம் ஏக்கரில் நாட்டு எலுமிச்சை சாகுபடி நடக்கிறது. இதில், புளியங்குடியில் மட்டும் பத்தாயிரம் ஏக்கரில் நடக்கிறது. அதனால்தான், இந்த ஊரை ‘லெமன் சிட்டி’ என்கிறார்கள். மற்ற ஊர் பழங்களைவிட இந்த ஊர் எலுமிச்சைக்கு நல்ல கிராக்கி இருக்கு. இது, அளவில் பெரிதாக இருக்கும். அதிக சாறு வரும். பறித்ததிலிருந்து 5 நாள் கழித்துதான் பழுக்கும். ரொம்ப நாள் வரை தாக்குப் பிடிக்கும். அதனால் போக்குவரத்துக்கும், வைத்து விற்பதற்கும் ஏதுவாக இருக்கும். இதெல்லாம்தான் இத்தனை கிராக்கி இருப்பதற்குக் காரணம் என்றார்.

20 அடி இடைவெளி!

“20 அடி இடைவெளியில் 3 அடி ஆழம் மற்றும் 3 அடி அகலம் இருக்கும்படி குழிகள் தோண்ட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 90 முதல் 100 குழிகள் வரை தோண்டலாம். ஒவ்வொரு குழியிலும் 15

கிலோ திருகுக்கள்ளியைப் போட்டு, அதன் மீது 20 கிலோ கொழிஞ்சி, ஆவாரை இலைகளைப் போட வேண்டும். பிறகு, 30 கிலோ தொழுவுரம், 2 கிலோ வேப்பங்கொட்டை, 1 கிலோ மண்புழு உரம் ஆகியவற்றைப் போட்டு, 25 நாட்களுக்கு அப்படியே வைக்க வேண்டும். (கொழிஞ்சி, ஆவாரை, திருகுக்கள்ளி போடமுடியாதவர்கள்... தொழுவுரம், மண்புழு உரம் மட்டும் போடலாம்). பிறகு, குழியின் நடுவில் ஒன்றரை அடி ஆழத்திற்குத் தோண்டி எலுமிச்சை நாற்றை நடவு செய்ய வேண்டும். சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தால், மகசூல் சீராக இருக்கும். கன்று நடவு செய்த 10 நாட்கள் வரை, கன்றின் மூட்டைச் சுற்றி தினமும் காலால் மிதித்துவிட வேண்டும். போதுமான அளவுக்குத் தொடர்ந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

15 ஆண்டுகள் வருமானம்!

40 முதல் 45 நாட்களில் புதுத் தளிர்கள் வரும். அந்த நேரத்தில் வண்ணத்துப் பூச்சிகளின் தாக்குதல் இருக்கலாம். 10 லிட்டர் தண்ணீரில் 1 லிட்டர் மாட்டுச் சிறுநீர், 100 மில்லி வேப்பெண்ணெய் ஆகியவற்றைக் கலந்து தெளிப்பான் மூலமோ அல்லது வேப்பிலை மூலமோ செடிகளின் மீது தெளித்தால், வண்ணத்துப் பூச்சிகள் வராது. 20 நாட்கள் இடைவெளியில் இக்கரைசலைத் தொடர்ந்து தெளிக்க வேண்டும். ஆண்டுக்கு இரண்டு முறை மரத்தின் மூட்டில் இருந்து, ஓர்அடி தள்ளி 20 கிலோ ஆடு அல்லது மாட்டு எரு, 1 கிலோ மண்புழு உரம் ஆகியவற்றைக் கலந்து வைக்க வேண்டும். வேறு எந்தப் பராமரிப்பும் தேவையில்லை. இரண்டாம் ஆண்டிலிருந்து காய்கள் காய்க்கத் தொடங்கும். தொடர்ந்து, 15 ஆண்டுகள் வரை காய்க்கும்'.

'ஒரு மரத்திலிருந்த வருடத்திற்கு சராசரியாக 300 காய் வரை கிடைக்கும். எங்க ஊரிலேயே சந்தை இருப்பதால், விற்பனைக்குப் பிரச்னையில்லை. சொல்லப்போனால், எலுமிச்சைக்கு என்று தனி மார்கெட் இங்குதான் இருக்கு. தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல் ஆந்திரா, கர்நாடகா, கேரளா என்று இங்கிருந்து எலுமிச்சை போகிறது. திருவனந்தபுரத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. பழத்தோட அடிப்படையில் மூன்று ரகமாக பிரித்து விலை வைப்பார்கள் என்றார்.

எலுமிச்சை சந்தை துணைத் தலைவர் திருமலைசாமியிடம் பேசியபோது, "முப்பது வருடத்திற்கு முன் எல்லாரோட வீட்டிலும், தோட்டத்திலும் எலமிச்சை காய்க்கும். வீடு வீடாக சென்று, 'எலுமிச்சை இருக்கா' என்று கேட்டு, பேரம் பேசி மூடை போடுவோம். அதில் நிறைய சிக்கல்கள் இருந்தது. அதன்பிறகு தான், புளியங்குடி மெயின் பஜாரில் எலுமிச்சைக்காக சந்தை

ஏற்படுத்தலாம் என்று விவசாயிகள் கேட்டாங்க. 89-ம் வருடம், சின்ன அளவில் கூரை செட் போட்டு ஆரம்பித்தோம். அதன் பிறகு 30 கடைகள் வந்திருச்சு. இங்கு திறந்தவெளி ஏலம்தான்.

மூடை கட்டி வரும் எலுமிச்சைகளைக் கொட்டி பரப்பி ஏலம் விடுவோம். பருமன், நிறத்தை வைத்து விலை கேப்பாங்க. நூற்றுக்கு பத்து காய் சேர்த்து மூடை பிடிக்க வேண்டும். அப்போது தான், பொட்டுக்காய், சொத்தைக்காய், வெம்பியக்காய் என்று கழிக்கும் போது சரியாக இருக்கும். ஏலம் விட்டதும் காய்களை எண்ணித்தான் மூடை போடுவோம். எடை கணக்கிலும் காய் ஏலம் விடலாம்.

சனிக்கிழமை தவிர, வாரம் முழுக்க சந்தை உண்டு. சாதாரணமாக காலையில் 11 மணிக்கு ஆரம்பித்து, சாயங்காலம் 3 மணிக்கு ஏலம் முடியும். சீசன் சமயங்களில் சாயங்காலம் 5 மணி வரைக்கும் கூட நடக்கும். ஜனவரி மாதத்திலிருந்து ஜீன் மாதம் வரைக்கும் சீசன். இதில், ஏப்ரல் கடைசியிலிருந்து, ஜீன் வரைக்கும் உச்சக்கட்ட சீசன். இந்த சமயத்தில், ஒரு நாளைக்கு 80 லாரி லோடு வரை (8 லட்சம் கிலோ அளவு) வரும். மற்ற சமயங்களில் தினமும் 20 ஆயிரம் கிலோ வரத்து இருக்கும் என்றார்.

புளியங்குடி, முகைதீன் அப்துல் காதர், “30 வருடமாக 6 ஏக்கரில் எலுமிச்சை விவசாயம் செய்கிறேன். மொத்தம் 600 மரம் இருக்கிறது. சராசரியாக ஒரு நாளைக்கு 120 கிலோவிலிருந்து 180 கிலோ வரை சந்தைக்குக் கொண்டு வருவேன். ஒரு கிலோ 50 ரூபாயிலிருந்து, 60 ரூபாய் வரை விலை போகிறது. தினமும் குறைந்தது 6 ஆயிரம் ரூபாய்க்கு காய் போடுவேன். இதில் பத்து சதவிகிதம் கமிஷன் போக 5 ஆயிரத்து 400 ரூபாய் கையில் கிடைக்கும் என்றார்.

திருவேட்டைநல்லூர், பெருமாள், “நினைவு தெரிந்த நாளிலிருந்தே எலுமிச்சை சாகுபடிதான். 4 ஏக்கரில் எலுமிச்சை இருக்கு. நான், எண்ணிக்கை முறையில்தான் விற்பனை செய்கிறேன். சாதாரண சமயத்தில் 1 ரூபாயிலிருந்து, 1 ரூபாய் 50 காசு வரைக்கும் ஒரு பழத்திற்கு விலை கிடைக்கும். சீசன் சமயத்தில் 3 ரூபாயிலிருந்து, 5 ரூபாய் வரை கிடைக்கும். போன சீசனில் 7 ரூபாய் அளவுக்கு விலை கிடைத்தது. எடையைவிட எண்ணிக்கை முறைதான் லாபமாக இருக்கு. தினசரி வருமானம், உடனடிப் பணம், திறந்தவெளி ஏலம், அதனால் விற்பவர், வாங்குபவர் இரண்டு பேருக்குமே நஷ்டம் இல்லை என்றார்.

தொடர்புக்கு,

திருமலைச்சாமி, செல்போன் : 94435 – 55936

அந்தோணிசாமி, செல்போன் : 99429 – 79141

முகைதீன் அப்துல்காதர், செல்போன் : 99409 – 26911

பெருமாள், செல்போன் : 94424 – 90253

**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.09.2014 www.vikatan.com**